1970 மார்ச் 12]

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தப் பாய்முடையும் தொழில் தமிழகத்தில் தொன்றுதொட்டு நடைபெறுகின்ற புராதனத் தொழில். அதில் பத்தமடையப் பாய் உலகப் பிரசித்தி பெற்றது. அப்படிப்பட்ட இந்தத் தொழிலுக்குத் தற்போது அரசாங்கம் எந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறது ? இந்த உதவியை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதிலே உள்ள அங்கத்தினர்களுக்கு 100 ரூபாயில் இருந்து 300 ரூபாய் வரை கடன் கொடுக்கிறது. உற்பத்தி ஆகக்கூடிய பத்து லட்சம் ரூபாய் பெறுமான சரக்குகளை விற்றுக் கொடுக்க மாநில சொசைடி ஏற்பாடு செய்கிறது.

THIRU K. VINAYAKAM : Are the mats manufactured in Pathamadai being exported to foreign countries and is it earning foreign exchange for our State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆகிறது என்ற விவரம் இல்லை. ஏற்றுமதி செய்யப் படுகின்ற முயற்சி எடுக்கப்படுமானல் நமது சொசைடி அதற்கான ஏற்பாடு செய்கிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பாய் நெசவாளர்களுக்கு மிகவும் தேவையானது கோரைப் புற்கள். ஆற்று ஓரங்களிலும், கால்வாய்ப் பக்கங்களிலும் கோரைப் புற்கள் இருக்கின்றன. அவர்கள் லைசென்ஸ் பெருமல் அவற்றைப் பறித்துக் கொள்ளுவதற்கு இடம் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோரைகள் உற்பத்தி செய்யக் கூடிய இடங்களில் இருந்து நெல்லை மாவட்டத்திற்குத் தேவையான கோரைகளை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கரூர் பகுதிகளில் இருந்து கோரைகளை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உவரிக்கருகே பவளம் கண்டுபிடிப்பு

***335 வின.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரித் தாலுக்காவில் உள்ள கடலோரப் பகுதியான உவரி கிராமத்தை ஒட்டிய கடலில் விலையுயர்ந்த பவளங்கள் உள்ளனவென்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

[1970 மார்ச் 12

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி கடலோரப் பகுதியில் முத்துக்கள் கிடைப்பதைப் போன்று உவரி கடலோரப் பகுதிகளில் விலை உயர்ந்த பவளங்கள் கிடைப்பதற்கு அறிகுறியாக சிறு சிப்பிகள் போன்றவை கடலோரத்தில் ஒதுங்குவதாக மீனவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதைப் பற்றி ஆய்வு செய்து விலை உயர்ந்த பவளங்கள் அங்கு இருக்குமானால் அதைக் கண்டுபிடித்து எடுக்க அரசு தரப்பில் முன்வருவார்களா?

மாண்புமிகு திருகு செ. மாதவன் : இதைப்பற்றி ஏற்கனவே ஜியாலஜிகல் துறையினர் ஆய்வு செய்தனர். அந்த ஆராய்ச்சியின் பேரில் பவளங்கள் கிடைப்பதாக, பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு கிடைப்பதாக ஆதாரம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். During the survey the occurrence of garnet sands (Iron Aluminimum Silicates) இருப்பதாகத்தான் கூறியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அழகாய் முத்துக் குவியும் கடல்கள் என்று புலவர்களால் புகழப்பட்ட தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் முத்துக் குவியல்களும், எந்தெந்த இடங்களில் பவளக் குவியல்களும் கிடைக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புலவர்கள் ஏராளமாகப் பாடிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் பாடியதெல்லாம் கிடைப்பதாகத் தெரியவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : உவரி பக்கம் கிடைக்கும் கார்னேட் சான்டைப் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய விவரம் இல்லை.

பேப்பர் இறக்குமதி

***336 வினா—திரு. கே. போஜன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்தோ வெளி நாடுகளிலிருந்தோ பேப்பர் இறக்குமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

---

* 375-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.